**நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) செயல்முறைகள்,**
**ஆணை பிறப்பிப்பவர் :- திரு. ப.தங்கவேலு, பி.எஸ்சி., பி.எட்.,**

**ந.க.எண். நி3/20840/2020** **நாள். 24.05.2023.**

**திருவள்ளுவராண்டு – 2054,**
**சோபகிருது, வைகாசி – 10.**

பொருள் :- பணியமைப்பு - தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் - நாமக்கல் மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - 2020-2021ஆம் ஆண்டு - இளநிலை உதவியாளர் நிலையில் 20 விழுக்காடு இட ஒதுக்கீடு - ஊராட்சி செயலாளர் பதவியிலிருந்து பணி மாற்றல் மூலம் இளநிலை உதவியாளர் நிலைக்கு பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் - பணி வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

படிக்க :-
1. நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். நி3/ 20840/2020, நாள். 06.02.2023.
2. தொடர்புடைய அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகள்.

❖❖❖

**ஆணை :-**

மேலே ஒன்றில் படிக்கப்பட்டபடி, நாமக்கல் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் 2020 - 2021 ஆம் ஆண்டு இளநிலை உதவியாளர்/ ஊர்நல அலுவலர் நிலை 2/ காசாளர் பதவிகளுக்கான மொத்த காலிப்பணியிடங்களில் 20 விழுக்காடு இடஒதுக்கீட்டில் அனுமதிக்கப்பட்ட இரு காலிப்பணியிடங்களுக்கு, ஊராட்சி செயலாளர் பதவியிலிருந்து பணி மாற்றல் மூலம் இளநிலை உதவியாளர் நிலைக்கு பணி நியமனம் அளித்து ஆணையிடப்பட்ட பின்வரும் அட்டவணையில் கண்டுள்ள இரு அலுவலர்களுக்கும் அவர்களுக்கு எதிரே கலம் (4)இல் கண்டுள்ள முதல் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டப் பிரிவு 28(1)ன்படி, இளநிலை உதவியாளர் நிலையில் பணியினை வரன்முறை செய்தும், தமிழ்நாடு அமைச்சுப் பணி விதிகளின் விதி 32(a)(i)ன்படி, தொடர்ச்சியான மூன்றாண்டுகளில் இரண்டாண்டுகால தகுதிகாண்பருவத்தினை துவக்கியும் இதன் வழி ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணியில் சேர்ந்து கொண்ட நாள். | பணி வரன்முறை செய்து தகுதிகாண்பருவம் துவக்கி ஆணையிடப்படும் நாள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | கு.பாபு,<br>ஊர்நல அலுவலர் (நிலை–2),<br>திருச்செங்கோடு வட்டாரம். | 07.02.2023<br>முற்பகல் | 07.02.2023<br>முற்பகல் |
| 2. | கே. கோவிந்தராஜ்,<br>இளநிலை உதவியாளர்,<br>ஊராட்சி ஒன்றியம்,<br>சேந்தமங்கலம். | 15.02.2023<br>முற்பகல் | 15.02.2023<br>முற்பகல் |

(திருப்புக)

2. இவர்கள் தங்களது தகுதிகாண்பருவ காலத்திற்குள்ளாக அரசாணை (நிலை) எண்.33, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எம்) துறை, நாள். 02.03.2017ல் குறிப்பிடப்பட்டுள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலர்களுக்கான பின்வரும் துறைத் தேர்வுகளில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண். | தாள் குறியீடு எண். | தேர்வின் பெயர் |
|---|---|---|
| 1. | 008 | Department Test for the staff of Rural Development and Panchyat Raj Department – Tamilnadu Panchyat Act, 1994 & Rules and Constitution of India |
| 2. | 166 | The Panchyat Development Account Test. |
| 3. | 010 | Department Test for the staff of Rural Development and Panchyat Raj Department – Scheme Administration. |
| 4. | 172 | The Tamilnadu Government Office Manual Test. |

3. இவ்வாணை குறித்த விவரத்தினை தனியர்களது பணிப்பதிவேடுகளில் பதிந்து, அதன் விவர்ஙகளை (பணிப்பதிவேடு தொகுதி மற்றும் பக்க எண் விவரங்களை உள்ளடக்கி) பணிப்பதிவேட்டின் பக்க நகலுடன் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைத்திட தொடர்புடைய அலுவலகத் தலைவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

.2023

மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர் (வளர்ச்சி),நாமக்கல்.

24.05.2023

பெறுநர் :

1. திரு. கு.பாபு
ஊர்நல அலுவலர் (நிலை-2),
திருச்செங்கோடு வட்டாரம். (அலுவலகம் வழியாக)

2. கே. கோவிந்தராஜ்,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம், சேந்தமங்கலம் (அலுவலகம் வழியாக).

படி :

1. ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், சேந்தமங்கலம்.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), திருச்செங்கோடு வட்டாரம்.
3. இவ்வலுவலக நி2 இருக்கை.
4. முக்கிய ஆணைத் தொகுப்பு / உதிரி.